கதிரயே வலய
புள்ளடியின் பலம்

ISSN-2706-0055

தொகுதி 6 இதழ் 1 தேர்தல் ஆணைக்குழு ஜனவரி - மார்ச 2022



# வாக்காளர் தின தேசிய நினைவு வைபவம் 2022

## 'உங்கள் வாக்கு நாட்டின் எதிர்காலம்'

தேர்தல் திணைக்களம் 2012 ஆம் ஆண்டு முதல் மற்றும் 2016 ஆம் ஆண்டு முதல் தேர்தல் ஆணைக்குழுவினால் ஆண்டுதோறும் ஜூன் மாதம் 01 ஆம் திகதி வாக்காளர் தினமாக அறிவிக்கப்பட்டு ஜனநாயகம், சர்வஜன வாக்குரிமை, இறையாண்மை மற்றும் தேருநர் இடாப்பில் பதிவதன் முக்கியத்துவம் குறித்த பல்வேறு விழாக்கள் மற்றும் அறிவூட்டும் நிகழ்ச்சிகளை முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்நிகழ்வு விரிவுரைகள், பாத யாத்திரைகள், ரத பவனிகள், பொதுக் கூட்டங்கள், துண்டுப் பிரசுர விநியோகம், வீதி நாடகங்கள், ஓவிய பேச்சுப் போட்டிகள் ஆகிய பல்வேறு நிகழ்ச்சிகளை உள்ளடக்கியதாகும்.

2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர், ஒரு தேருநராக பதிவதற்குத் தகைமை பெறும் நாளாக ஜூன் மாதம் 01 ஆம் திகதிக்கு பதிலாக பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டு முதல் அந்நாளை 'வாக்காளர் தினமாக' தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

'தேருநர்களைப் பதிவுசெய்தல் திருத்தச் சட்டம் 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளதுடன் தேருநர் பதிவு தொடர்பாக மக்களை விழிப்பூட்டுவதற்கான பல்வேறு திட்டங்களை நாடு முழுவதும் நடாத்த தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. இம்முறை வாக்காளர் தின தேசிய நிகழ்வுகள் 2022.03.11 ஆம் திகதி அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் தலைமையில் மற்றும் கௌரவ பிரதம அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள், கௌரவ சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்கள், தேர்தல் சட்டத் திருத்தத்திற்காக நியமிக்கப்பட்ட விசேட பாராளுமன்ற தெரிகுழுவின் தலைவர் கௌரவ சபைத் தலைவர் திரு. தினேஷ் குணவர்தன அவர்கள், அரசியல் கட்சிச் செயலாளர்கள், வெளிநாட்டு தூதுவர்கள்/உயர்ஸ்தானிகர்கள், அரச உயரதிகாரிகள், தேர்தல் அதிகாரிகள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் உட்பட தேர்தல் ஆணைக்குழுவின் பங்கீடுபாட்டுக் குழுக்களின் பங்கேற்புடன் கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெற்றது.

இவ்விழாவின் போது வருகை தந்திருந்த அனைத்து அதிதிகள் உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்கள் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் திரு. சமன் ஸ்ரீ ரத்நாயக்க அவர்களினால் வரவேற்கப்பட்டதுடன், விழாவில் 'வாக்குரிமை மற்றும் இளைஞர் சமூகத்தின் பொறுப்புக்கள்' எனும் தலைப்பில் ருஹுணு பல்கலைக்கழக துணை வேந்தர் முதுநிலைப் பேராசிரியர் சுஜீவ அமரசேன அவர்களால் சிறப்புரை நிகழ்த்தப்பட்டது.

தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் திரு. நிமல் ஜீ.புஞ்சிஹேவா அவர்கள் இங்கு கருத்துத் தெரிவிக்கையில், தேர்தல்களின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கங்களில் தவறுகள் இருப்பின் அவற்றைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் வாக்காளருக்கு ஒரு பொறுப்புடைய பிரசையாக முடியும் என்றும், மக்கள் பிரதிநிதிகளின்றி பொது நிறுவனங்களை நடத்தி செல்வது மற்றும் உரிய காலத்தில் தேர்தல்களை நடத்தாமை மற்றும் ஒத்திவைத்தல் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவின் உடன்பாடில்லை எனவும், மக்கள் பிரதிநிதிகள், பிரதிநிதித்துவப் பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றாத பட்சத்தில் மீளழைக்கும் வாய்ப்பு இருக்க வேண்டுமென்றும் தெரிவித்ததுடன், அனைத்து வேட்பாளர்களுக்கும் சம வாய்ப்புகள் கிடைக்கும் வகையில் தேர்தல் காலங்களில் ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்படும் ஊடக அளவுகோல்களைச் செயற்படுத்துவதற்கு அரச ஊடகங்கள் மாத்திரமின்றி தனியார் ஊடகங்களும் சமூக ஊடகங்களும் செயற்பட வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது. மேலும் தேர்தல் சட்டதிட்டங்களிலுள்ள தொழில்நுட்பப் பிரச்சினைகளை நிவர்த்திசெய்தல் மற்றும் மிகவும் ஜனநாயக ரீதியான தேர்தல் செயல்முறையொன்றை நிறுவுவதற்கு மகளிர் மற்றும் இளைஞர் பிரதிநிதித்துவத்தை ஸ்தாபித்தல் உட்பட தேவைப்படும் தேர்தல் சட்டத் திருத்தங்களை மேற்கொள்வதற்கும் பாராளுமன்ற விசேட தெரிகுழுவொன்றை நியமித்தல் தொடர்பாக அதிமேதகு ஜனாதிபதி, கௌரவ பிரதம அமைச்சர் தலைமையிலான அரசாங்கத்திற்கு ஆணைக்குழுவின் நன்றி உரித்தாவதுடன், அத்தெரிகுழுவிற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளைச் செயற்படுத்துவதை ஜனநாயக வாய்ப்புக்களை விரிவுபடுத்தும் திருப்புமுனையாக ஆணைக்குழு கருதுவதாகவும் அவற்றைச் செயற்படுத்துவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் செயற்படுமென்ற நம்பிக்கையை தெரிவிப்பதுடன், அம்முன்மொழிவுகளின் சுருக்கமொன்றும் தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

கௌரவ பிரதம அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் இங்கு உரையாற்றும்போது ஆசிய நாடுகளுக்கிடையில் முதன்முறையாக சர்வஜன வாக்குரிமை அமுல்படுத்தப்பட்ட நாடான இலங்கை, உலக ஜனநாயக வரலாற்றில் குறிப்பிடத்தக்க மைல்கல்லை அடைந்துள்ளதென்றும், மக்கள் ஆர்வத்துடன் வாக்களிப்பதற்கு அணிதிரள்வதாகவும் கருத்துத் தெரிவித்தார். உரிய முறையில் வாக்கெடுப்புகளை நடத்துவது ஒரு ஜனநாயக நாட்டில் முக்கிய அம்சம் என்றும், வாக்குரிமையைச் செயற்படுத்துவதற்கு பின்பற்றப்பட வேண்டிய செயன்முறை தொடர்பாக அநேகமானர்களுக்கு இருக்கும் அறிவு குறைவாக உள்ளதென்றும், வாக்காளர் தின நிகழ்ச்சிகளில் அது தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறதென்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ் வைபவத்தில் உரையாற்றிய இலங்கைப் பாராளுமன்றத்தின் கௌரவ சபைத் தலைவர் திரு. தினேஷ் குணவர்தன அவர்கள் கருத்துத்

தெரிவிக்கையில், தேர்தல் சட்டங்களை மறுசீரமைப்பதற்கான பாராளுமன்ற தெரிகுழு பெற்றுக்கொடுக்கும் முக்கிய பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்கு அதிக காலமெடுத்தல், அவ்வாறான அனைத்து செயற்குழுக்கள் தொடர்ச்சியாக முகங்கொடுத்த பாரிய பிரச்சினை என்றும், இதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட 18 வருடங்கள் பூர்த்தியடைந்தவுடன் வாக்குரிமையைப் பெற்றுக்கொடுத்தல், வாக்கெடுப்பின்போது தேசிய அடையாள அட்டையை கட்டாயப்படுத்தல், தொகுதிவாரி தேர்தல் முறை, விகிதாசார தேர்தல் முறை, கலப்புத் தேர்தல் முறை ஆகியன இவற்றுக்கான சில உதாரணங்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. மேலும் மக்களுக்கு வாக்குரிமையைப் பெற்றுக்கொடுத்த போதிலும் குறிப்பிட்ட காலத்தைத் தாண்டி வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்படுமாயின், அது ஒரு பாரதூரமான ஜனநாயக விரோத செயல் என்றும், மக்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தி வாக்கெடுப்பின் பின்னரும் மக்கள் ஜனநாயக ஆட்சியில் பங்கேற்கும் முறையொன்று தேவை என்றும், வாக்காளர் தின தேசிய விழாவை நடத்துதல் மற்றும் தேர்தல் முறையை மறுசீரமைப்பதற்கு காண்பிக்கும் ஆர்வம் தொடர்பாகவும் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட ஆணைக்குழுவிற்கு தமது நன்றி உரித்தாவதாகவும் தெரிவித்தார்.


மேலும் பொது வாசகர்களுக்கும், ஆய்வாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் தேர்தல் திறத்தவர்களுக்கு பயனளிக்கக் கூடும் என்ற எதிர்பார்ப்புடன் இத் தேசிய விழாவுடன் ஒட்டியதாக இறையாண்மை, சர்வஜன வாக்குரிமை மற்றும் ஜனநாயகம் தொடர்பாக கலந்துரையாடும் அறிஞர்களின் கட்டுரைகள் அடங்கிய '2022 ஆம் ஆண்டு வாக்காளர் தின தேசிய நினைவு விழா - கட்டுரைத் தொகுப்பு' எனும் தலைப்பிலான ஒரு கல்வித் தொகுப்பொன்றும் வெளியிடப்பட்டது.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி அவர்களும், கௌரவ பிரதமர் உட்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், இராஜதந்திரிகள், அரச உயரதிகாரிகள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், மகளிர், இளைஞர், ஊனமுற்றவர்களின் பிரதிநிதிகள் உட்பட்ட பல விருந்தினர்களின் பங்கேற்புடன் நடைபெற்ற இந்நிகழ்வை ஏற்பாடுசெய்து தேர்தல் ஆணைக்குழுவிற்கு சிறப்பாக நடத்த முடிந்தது.



























# வாக்குரிமையும் வாக்காளர் தினமும்




**நலின் சேமகே**
தவிசாளரின் இணைப்புச் செயலாளர் – தேர்தல் ஆணைக்குழு

1931 ஆம் ஆண்டு முதல் வாக்குரிமை அமுல்படுத்தப்பட்டபோதும் ஆசியாவில் முதன்முதலாக சர்வஜன வாக்குரிமையை செயற்படுத்திய நாடு இலங்கை என்பதால், ஜனநாயக ஆட்சி தொடர்பில் எமது நாடு சிறப்பிடம் வகிக்கின்றது. தேர்தலொன்றைப் பிரகடனப்படுத்தியவுடன் எமது நாட்டு மக்கள் வெகு ஆர்வத்துடன் வாக்களிப்பதற்கு ஆயத்தமாவார்கள் என்பது முந்திய அனுபவங்களுக்கமைய தெரிந்த விடயமே. எனினும் தேர்தலுக்குரிய செல்லுபடியாகும் தேருநர் இடாப்பில் பெயர் உட்சேர்க்கப்படாமை காரணமாக கணிசமானளவு பொது மக்களுக்கு வாக்களிக்க முடியாத நிலையில் விசனம் தெரிவிக்கப்படும் சந்தர்ப்பங்களையும் காண முடிகிறது.

தேர்தலொன்றின் போது அல்லது வாக்கெடுப்பொன்றின் போது வாக்களிக்கும் உரிமையைப் பெற்றுக்கொள்ளும் முறைமை தொடர்பான குறைந்த அறிவு மற்றும் அது தொடர்பான ஆர்வம் மிகவும் கீழ் மட்டத்தில் இருப்பதனால், வாக்காளரொருவராகப் பதிவுசெய்துகொள்வதற்குத் தகைமையுடைய பிரஜைகளில் கணிசமானோரின் பெயர்கள் தேருநர் இடாப்பில் உள்வாங்கப்படுவதில்லை என்பதும் அவதானிக்கப்படுகிறது.

வாக்காளர்களின் பதிவு தொடர்பான சட்ட ரீதியான விடயங்கள் அடங்கிய சட்டம் 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டமாகும். இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டதுடன், 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி முதல் அதன் ஏற்பாடுகள் அமுல்படுத்தப்படுகிறது.

தேருநராகப் பதிவுசெய்துகொள்வதற்கான குறித்துரைக்கப்பட்ட தகைமைகளும் தகைமையீனங்களும் பற்றி அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்விடயங்களை முடிவுசெய்வதற்கான ஒரு குறிப்பிட்ட திகதியும் வதிவும் இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத் திகதியளவில் பதினெட்டு (18) வயதை எய்தியவர்கள், தேருநரொருவராகப் பதிவுசெய்வதற்கான அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்தவர்களாக கணிக்கப்படுவர். 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க திருத்தச் சட்டத்திற்கு முன்னர் இத்தினம் குறித்த ஆண்டின் ஜூன் மாதம் 01 ஆம் திகதியாகக் கருதப்பட்டது. இத்திருத்தத்திற்கமைய தேருநரொருவராகப் பதிவுசெய்துகொள்வதற்கு தகைமை பெறும் திகதியாக பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி கருதப்படுகிறது. தேருநரொருவராகப் பதிவுசெய்துகொள்வதற்குத் தகைமை பெறும் திகதி தேர்தல் ஆணைக்குழுவினால் 'வாக்காளர் தினமாக' பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய 2022 ஆம் ஆண்டு முதல் பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி 'வாக்காளர் தினமாகக்' கருதப்படுகிறது.

தகைமையுள்ள அனைவரையும் உள்ளடக்கிய வாக்கெடுப்புகளை நடாத்துதல் எனும் கருத்துருவை அடைந்துகொள்வதற்கு வாக்காளர் தினமொன்றைக் குறிப்பிடுதல் முக்கியமாகும். தகைமையுடைய அனைத்துப் பிரஜைகளுக்கும் வாக்குரிமையைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்பது ஜனநாயகத்தை மதிக்கும் அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொள்ளும் ஒரு விடயமாகும்.

தேருநர் இடாப்பை வருடாந்தம் மீளாய்வுசெய்து முடிந்த வரை அனைவரையும் உள்ளடக்கிய தேருநர் இடாப்பொன்றைத் தயாரிக்கும் வரையறுக்கப்பட்ட நாடுகளில் இலங்கை முன்னிலை வகிக்கின்றது. மேலும் நாட்டின் முதன்மைச் சட்டமான அரசியலமைப்பின் 3 ஆம் உறுப்புரைக்கமைய இலங்கைக் குடியரசில் இறைமை மக்களுக்குரியதாகவும், பராதீனப்படுத்த முடியாததாகவும் இருக்கும். இறைமை என்பது ஆட்சித் தத்துவங்கள், அடிப்படை உரிமைகள், வாக்குரிமை ஆகியவற்றை உள்ளடக்கும் எனக் குறிப்பிடப்பட்டிருப்பதிலிருந்து தேருநரொருவராவதன் மூலம் வாக்குரிமையைப் பெற்றுக்கொள்வதன் முக்கியத்துவம் அதன் மூலம் தெளிவாகின்றது.

அரசியலமைப்பின் 3 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சித் தத்துவங்களில் நிறைவேற்றுத்துறை, சட்டவாக்கத்துறை, நீதித்துறை தத்துவங்கள் அடங்கும். நிறைவேற்றுத்துறைக்கும் சட்டவாக்கத்துறைக்கும் பிரதிநிதிகள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதனால் இந்த ஆட்சித் தத்துவங்கள் வாக்குரிமையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றதென்பதும், அதன் மீது தங்கியிருக்கின்றதென்பதும் தெளிவானது. அடிப்படை உரிமைகள் தவிர்ந்த இறைமையின் கீழ் கொள்ளப்படும் ஏனைய விடயங்களும் பொது மக்களின் வாக்குரிமை மீது நிர்ணயிக்கப்படுகின்றதென்பது மிகத் தெளிவானது. இவ்வாறு நோக்குமிடத்து, தேருநர் இடாப்பை நாட்டின் மிக முக்கியமான ஓர் ஆவணமென்று குறிப்பிடலாம்.

18 வயதையடைந்த இலங்கைப் பிரஜையொருவருக்கு வாக்குரிமை உரித்தாகிறது. அதற்காக பூர்த்தி செய்யப்பட வேண்டிய சில நிபந்தனைகள் உள்ளன. அதாவது பதிவுக்காக விண்ணப்பிக்கும் இடத்தில் பொதுவான வதிவைக் கொண்டுள்ளவராகவும் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையீனங்களுக்கு உட்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்திற்கிணங்க தகைமை பெறும் தினத்திற்குப் பின்னர் பிறந்த நபரொருவர் 18 வயதை அடைந்த போதிலும், அதற்கடுத்துவரும் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு வரை தனது பெயரை தேருநர் இடாப்பில் சேர்த்துக்கொள்வதற்கு முடியாதிருந்தது. அதற்கமைய அக்காலப்பகுதியில் தேர்தலொன்று நடைபெறுமாக இருப்பின் 18 வயதை அடைந்த போதிலும் தேருநர் இடாப்பில் பெயர் உட்சேர்க்கப்படாமை காரணமாக இளைஞர் சமூகத்தில் ஒரு பகுதியினருக்கு குறிப்பிட்ட சில வாக்கெடுப்புகளின் போது வாக்குரிமை கிடைக்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. இச்சிக்கல்நிலைக்கும் மட்டுப்பாடான நிலைக்கும் சாதகமான ஒரு தீர்வு 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் மூலம் தகைமைபெறும் தினத்திற்குப் பின்பு அவ்வக் காலப்பகுதிகளில் 3 குறைநிரப்பு தேருநர் இடாப்புக்களைத் தயாரித்து அத்தாட்சிப்படுத்திய பின்னர் அக்குறைநிரப்பு இடாப்புக்களை முதன்மை தேருநர் இடாப்பில் உட்சேர்த்துக் கொள்ளக்கூடியவாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாக்காளர் தினத்தை நினைவுகூர்வதற்காக நடைபெறும் பல்வேறு வைபவங்கள், நிகழ்ச்சித்திட்டங்களின்போது தேருநர் இடாப்பில் பெயர் உட்சேர்க்கப்படவில்லையென அதுவரை அடையாளம் காணப்பட்ட விளிம்புநிலை பிரிவினரை அது குறித்து அறிவுறுத்தல், வாக்காளர்களைப் பதிவுசெய்வதற்கான சட்டம் பற்றி பிரஜைகளையும் அதிகாரிகளையும் அறிவுறுத்தல், குறைநிரப்பு தேருநர் இடாப்பு பற்றி இளைஞர் சமூகத்தை அறிவுறுத்தல், வாக்காளர் பதிவு தொடர்பில் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளின் ஆர்வத்தை ஏற்படுத்துவதன் மீது கவனத்தை ஈர்ப்பதன் மீது தேர்தல் ஆணைக்குழு கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கின்றமை சிறந்ததொரு போக்காகும்.

தேருநர்களைப் பதிவுசெய்தலின்போது புதிய தொழில்நுட்பத்தையும் உபயோகித்து தகைமையுள்ள அனைத்துப் பிரஜைகளில் ஆகக்கூடிய எண்ணிக்கையானவர்களை உள்ளடக்கிய தேருநர் இடாப்பொன்றைத் தயாரிப்பதற்கான தேர்தல் ஆணைக்குழுவின் முயற்சியை யதார்த்தமாக்குவதற்கு ஜனநாயகத்தை மதிக்கும் சம்பந்தப்பட்ட அனைத்துத் திறத்தவர்களதும் ஒத்துழைப்பை வழங்குவது அத்தியாவசியமாகும்.

# 2022 தேருநர் இடாப்பு மீளாய்வு




ஶ்ரீன் யாப்பா பொரலெஸ்ஸ
உதவித் தேர்தல்கள் ஆணையாளர் (தேசிய தேர்தல்கள்)

## 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வுச் செயன்முறை

கடந்தாண்டுகளில் ஜூன் மாதம் 01 ஆம் திகதி முதல் தேருநர்களின் கணக்கெடுப்பு ஆரம்பமான போதிலும் 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்த) சட்டத்தின் மூலம் தேருநர்களைக் கணக்கெடுக்கும் நாள் பெப்ரவரி 01 ஆம் திகதியாக மாற்றப்பட்டது. அதற்கமைய 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி முதல் தேருநர்களைக் கணக்கெடுக்கும் பணி ஆரம்பமானது.

பொதுவாக முந்திய தேருநர் இடாப்பு மீளாய்வுகளின் போது ஒவ்வொரு வீட்டுக்கும் தேருநர்களைக் கணக்கெடுக்கும் படிவமொன்றை (BC படிவம்) பகிர்ந்தளித்து கணக்கெடுப்பு நடாத்தப்பட்டபோதிலும் நாட்டில் தற்போது நிலவும் கொவிட் -19 பெருந்தொற்று நிலைமை காரணமாக குடிமக்களினதும், உத்தியோகத்தர்களினதும் சுகாதாரப் பராமரிப்புக் கருதி 2021 ஆம் ஆண்டுக்கான தேருநர் இடாப்பு மீளாய்வின் போது மேற்கொள்ளப்பட்டவாறு தேருநர்களைக் கணக்கெடுப்பதற்கான படிவங்களை விநியோகிக்காதிருப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்தது. அதற்குப் பதிலாக 2021 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பிலிருந்து நீக்கப்படும் மற்றும் புதிதாக உட்சேர்க்கப்படும் பெயர்களைக்கொண்டு மாத்திரம் தேருநர் கணக்கெடுப்பு மீளாய்வுக்காக 2022/ER எனும் விஷேட படிவம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பதிவுசெய்யும் நடவடிக்கைகள் பின்வருமாறு இடம்பெறும்: –

- நாட்டில் நிலவும் கொவிட் -19 பெருந்தொற்று நிலைமை காரணமாக இவ்வாண்டிலும் 2021 ஆம் ஆண்டில் போன்றே வீடுகள்தோறும் தேருநர் கணக்கெடுப்பு (BC) படிவங்கள் விநியோகிக்கப்பட மாட்டாதென்பதால், 2021 ஆம் ஆண்டில் தேருநர் இடாப்பில் தங்களது பெயர் பதியப்பட்டுள்ளதா என்பதை www.elections.gov.lk என்ற இணையத்தளத்தில் அல்லது கிராம அலுவலர் அலுவலகத்தில் பரீட்சிக்க வேண்டும்.
- 2021 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் தங்களது பெயர் பதியப்பட்டிருப்பின் அத்துடன் 2022 பெப்ரவரி 01 ஆம் திகதியளவில் தங்களது வதிவிடம் மாற்றப்பட்டிருக்கவில்லையெனில், எந்தவொரு விண்ணப்பப்படிவத்தையும் நீங்கள் பூர்த்திச் செய்ய வேண்டிய தேவையில்லை. அதற்கமைய 2021 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பதியப்பட்ட முகவரியிலேயே 2022 ஆம் ஆண்டிற்கும் தங்களது பெயரைப் பதிவு செய்ய தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும்.

## வதிவிடம் மாற்றமடைந்ததன் காரணமாக புதிய பதிவு தொடர்பில் செயலாற்றப்பட வேண்டிய முறை

தங்களது பொதுவான வதிவிடம் 2022 பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதிக்கு முன்னர் மாற்றப்பட்டிருப்பின் மாத்திரம் 2022 ஆம் ஆண்டுக்கான தேருநர் இடாப்பில் புதிய முகவரியின் கீழ் பதிவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. அதற்காக நீங்கள் தற்போதைய வதிவிட முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலரைச் சந்தித்து 2022/ER படிவமொன்றைப் பெற்று அதனைப் பூர்த்திசெய்து கையளிக்க வேண்டும். இப்படிவத்தை www.elections.gov.lk என்ற இணையத்தளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும். இப்படிவத்தில் தங்களது முந்திய பதிவு விபரங்களைக் குறிப்பிடுவதற்கான நிரலில் அவ்விடயங்களை கட்டாயமாக குறிப்பிட வேண்டும். அதேபோல் முந்திய வதிவிடத்தை விட்டுச் சென்றமை தொடர்பாக கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட கடிதத்தைச் சமர்ப்பிப்பது கட்டாயமானதல்ல.

## 2021 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பதியப்பட்டிருக்கவில்லையெனில், அத்தகையவர்கள் 2022 ஆம் ஆண்டில் தேருநராகப் பதியப்பட வேண்டிய முறை

2021 ஆம் ஆண்டுக்கான தேருநர் இடாப்பில் பதிவுசெய்யப்படாதவர்கள் தற்போது பொதுவாக வதிவிடமாகக் கொண்டுள்ள பகுதியின் கிராம அலுவலரைச் சந்தித்து 2022/ER படிவமொன்றைப் பெற்றுக்கொள்வதன் மூலம் அல்லது தேர்தல் ஆணைக்குழுவின் www.elections.gov.lk என்ற இணையத் தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து அப்படிவத்தை உரிய முறையில் பூர்த்திசெய்து கிராம அலுவலரிடம் கையளிக்க வேண்டும். இப்படிவத்தில் நீங்கள் இறுதியாக தேருநர் இடாப்பில் பதிவுசெய்திருந்த முகவரி தொடர்பான விபரங்களைக் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

## 2022 ஆம் ஆண்டில் 18 வயதை எய்திய நபர்களை தேருநர் இடாப்பில் பதிவுசெய்தல்.

2004.01.31 ஆம் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் பிறந்தவர்கள் 2022 ஆம் ஆண்டுக்கான தேருநர் இடாப்பில் பதிவதற்குத் தகுதி பெறுவர். அதற்கமைய இவ்வாண்டில் 18 வயதை எய்தும் நபர்கள் 2022/ER படிவமொன்றைப் பூர்த்திசெய்து பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் மற்றும் தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்றுடன் கிராம அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும்.

## நிகழ்நிலை (Online) பதிவுக்கான வசதி

அவ்வாறே தேருநர் இடாப்பில் பதிவதற்காக விண்ணப்பிப்பதற்கு நிகழ்நிலை (Online) வசதியும் தற்போது வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்காக தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் சஞ்சரித்து (www.elections.gov.lk) அதில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய தேருநரொருவராகப் பதிவுசெய்து கொள்வதற்கு விண்ணப்பிக்க முடியும்.

## 'அ' மற்றும் 'ஆ' பட்டியல்களை காட்சிப்படுத்தல்

2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் உட்சேர்க்கப்படுவதற்கு (அ) மற்றும் நீக்குவதற்கு (ஆ) பரிந்துரைக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்கள்

பக்கம் 11...




# சினிமாவும் மக்கள் அபிப்பிராயத்தை உருவாக்கலும் உலக அரசியலும்

**எச்.ஏ.கயான் மதுசங்க**
விரிவுரையாளர் (பயில்நிலை) - திரைப்பட, தொலைக்காட்சித் தயாரிப்புத் தொழில்நுட்பக் கற்கைத்துறை, தொழில்வாண்மை தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்

கொவிட் –19 தொற்றுநோய் நிலைமை திரைப்படங்களை திரையரங்குகளிலிருந்து இணையத்தை நோக்கி நகர்த்தியுள்ளது. இந்நிலை காரணமாக மிகக் கூடுதலான பார்வையாளர்கூடமொன்றுக்கு மிகத் துரிதமாக சினிமாவை எடுத்துச்செல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளது. அதன் மூலம் ஏற்படுத்தப்படும் தாக்கமும் அதேபோல் வேகமானமானதென்பதை சுட்டிக்காட்டலாம். இணையத்தினூடே திரைப்படங்களைப் பார்வையிடக் கூடியதாக இருப்பதன் காரணமாக பெருந்திரளானவர்களுக்கு திரைப்படங்களைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. 'The Family Man' திரைப்படத்திற்கான திரைக்கதையின் இரண்டாவது கதைத்தொடர் ஜூன் மாதம் 04 ஆம் திகதி பார்வையாளர்களுக்கு எமசன் பிரைம் வீடியோ இணையத்தளத்தினூடே பார்வையிடக்கூடிய ஒரு திரைப்படமாக வருகிறது. இந்த இணைய கதைத் தொடரின் முதலாவது கதைக்கூறு பெருந்திரளான பார்வையாளர்களை வசீகரித்துள்ளது. அக்சன், காமடி, டிராமா ஆகியன அடங்கிய தொலைக்காட்சித் தொடரின் இரண்டாம் கதைக்கூறு ஏற்கனவே கணிசமான பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்துவிட்டது. இத்தொடரில் அதன் முக்கிய கதைக் கூறுகளை இலங்கையுடன் நேரடித் தொடர்பொன்று இருப்பதே இலங்கையர்களான எமக்குள்ள நெருக்கமாகும். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நிலவும் அரசியல் ரீதியான உறவும் எல்ரீரீஈ இயக்கத்துடன் தொடர்புடைய சம்பவங்களும் இத்திரைப்படத்தை மையப்படுத்தியுள்ளன.

சினிமாவை இரசனைக்கான அழகியல் உணர்ச்சி ஊடகமாகமொன்றாகவும் மக்கள் அபிப்பிராயத்தை வடிவமைக்கும் ஊடகமொன்றாகவும் சுட்டிக்காட்டலாம். இந்தியா தனது பரப்புரைகளுக்காக சினிமாவை நேரடியாகவே கையாள்கிறது. இதனை நன்குணர்ந்த ஒரு நாடே இந்தியா. இந்தியத் திரைப்படங்கள் ஏராளமான தூதுகளை எடுத்துச் செல்வதைப் போலவே, தமது நாட்டவரின் அபிப்பிராயத்தை மாற்றுவதன் மீதும் அது பிரயோகிக்கப்படுகிறது. இவ்வனைத்தையும் விட ஒரு கைத்தொழில் என்ற ரீதியில் சினிமா இந்தியாவுக்கு வருமானத்தை ஈட்டித்தருகிறது. வருமானத்தை ஈட்டித்தரும் ஒரு கருவி சினிமா என்பதைத் தாண்டி சினிமாவினால் இந்தியா அடைந்துகொள்ளும் பலாபலன்கள் பல. இந்தியா முழுவதும் இடம்பெற்ற சம்பவங்கள் அதற்குச் சாட்சி பகரும். வருமானத்தை உருவாக்கும் ஒரு கைத்தொழிலுக்கு அப்பால் மக்கள் அபிப்பிராயத்தைச் சித்தரிக்கும் ஊடகமொன்றாகவும் சினிமாவை அறிமுகப்படுத்தலாம். இக்கட்டுரைக்கு கருப்பொருளாக அமையும் திரைப்படம் மக்கள் அபிப்பிராயத்தை சித்தரிப்பதன் மீது எந்தளவு தூரம் தாக்கம் செலுத்துகின்றது என்பது குறித்து ஆராயப்பட வேண்டும். 'The Family Man' தொலைக்காட்சித் தொடர் இலங்கையின் அரசியல் சூழமைவு பற்றி நேரடியாகவே அலசுகிறது. இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான பொருளியல், அரசியல் தொடர்பு குறித்த இந்தியப் பார்வை இத்திரைப்படத்தின் கதாம்சமாக அமைகிறது. அதேபோல் இத்திரைப்படம் எல்ரீரீஈ இயக்கமும் அதன் செயற்பாடும் பற்றி நேரடியாகவே பேசுகிறது. காட்சித்தளங்களாக இலங்கையின் சில பகுதிகள் மட்டுப்படுத்திய அளவில் காண்பிக்கப்படுவதோடு சிங்களமொழி உரையாடல்களையும் இத்திரைப்படத்தில் காணலாம். இத்திரைப்படம் நேரடியாகவே இலங்கை பற்றிப் பேசுகிறது. காட்சித் தளங்களாக இலங்கையின் சில பகுதிகள் சினிமாத்தனமாக சித்தரிக்கப்படுகிறது. சிங்கள மொழியிலும் உரையாடல்களும் இதில் அடங்கியுள்ளன. அதன்மூலம் ஏற்படுத்தப்படும் தாக்கம் எத்தகையதென்பது குறித்து நிச்சயம் ஆராயப்பட வேண்டும். ஒரு திரைப்படமெனும்போது ஒரு கற்பனைக் கதையாக இருக்கலாம். அதேபோல் இத்திரைப்படத்தொடர் இந்திய அரசின் ஒரு கதையன்றி இணைய கதைத்தொடர் இயக்குநர்கள், தயாரிப்பாளர்களின் ஒரு கதையாக இருக்கலாம். இருப்பினும் அதன் மூலம் ஏற்படுத்தப்படும் தாக்கம் கற்பிதமானதன்று. இந்தியா இலங்கையர்களுக்கு இத்திரைப்படத்தின் மூலம் எதனைக் கூற முற்படுகிறது? அன்றேல், அது இத்திரைப்படத்தின் மூலம் யாதேனுமொரு செய்தியை வழங்குகிறதா என்பது குறித்தும் அடுத்து சிந்திக்க வேண்டியுள்ளது. இந்திய சினிமாப் பிரயோகம் பற்றிய ஒரு சிறு கருத்தைப் பெற்றுக்கொள்வது இத்திரைப்படம் பற்றிய புரிதலை ஏற்படுத்திக்கொள்ள வழியமைக்கும்.

இனம், மதம், சாதி, மாநிலம் என்ற அடிப்படையில் பிரிந்துள்ள இந்திய மக்களை இந்துஸ்தானி தேசியத்தின் கீழ் அணிவகுக்கச்செய்யும் பணியை பாடசாலை மட்டத்திலிருந்து இடம்பெற்ற கல்விச் செயன்முறையொன்றை விட வேகமாக சினிமாவினூடாகவே மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது, மேலைத்தேய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுதலை அடைந்த பின் இந்திய சினிமா தேசிய உணர்வை வளர்ப்பதை நோக்காகக்கொண்ட கதைத்தொடர்களைக் கொண்ட சினிமா படைப்புக்களை வெளிக்கொணர்ந்தது. இன்றும் அதே நிலையே உள்ளது. சினிமாவினூடாக நாட்டை நேசிக்கும் தேசாபிமானிகளை உருவாக்கும் சிந்தனா ரீதியான ஒரு முயற்சியில் இந்தியா கால்பதிந்தது. தேசப்பற்றும் தேசாபிமானமும் மக்கள் மனங்களை விட்டகலாதிருக்க சினிமா ஊடகம் பங்காற்றியது. 1947 இல் இந்தியா சுதந்திரமடைந்ததையடுத்து ஜவஹர்லால் நேருவின் சிந்தனை வழியே, தேசியவாத சிந்தனை வழியே பயணிக்கலாயிற்று. இந்திய பண்பாடு, உணவு பானங்கள், ஆடை அணிகலன்கள், மதம் போன்றவற்றின் மீது மக்களின் கவனத்தைச் செலுத்துவதற்கும் மேலைத்தேயமயமாக்களிலிருந்து மக்களைத் தூரமாக்கி இந்துஸ்தானி கருத்துருவுக்குள் இந்தியனைக் கொண்டுசேர்ப்பதற்கும் சினிமா முக்கிய பங்காற்றியது. இதன் காரணமாக இந்திய பொருளாதாரத்தை ஒடுக்குவது மேலைத்தேயங்களுக்கு எளிதானதாக இருக்கவில்லை. சினிமாவை விட பிற்காலத்தில் உருவான கவ(ட்)ட க(த்)தி(க்)கயா, கவ(ட்)ட ரஜா, தெனுமெதி கவ(ட்)டயா முதலான நகைச்சுவைப் பத்திரிகைகள் மூலம் இலங்கையில் இப்பணி முன்னெடுக்கப்பட்டது. இலங்கையில் தோன்றிய ஆரம்ப கால செய்திப் பத்திரிகை ஊடகமும் மக்கள் மத்தியில் மத, அரசியல் கருத்தியல்களைக் கொண்டு சேர்ப்பித்து மக்கள் அபிப்பிராயத்தை வடிவமைக்கும் பணியில் ஈடுபட்டன. இந்தியா சினிமா துறையின் முன்னேற்றம் காரணமாக அது மிகவும் உத்வேகமடைந்தது. அதேபோல் படிப்பறிவில் ஒரு பிரச்சினையும் ஏழமை காரணமாக சினிமா அதற்கு மிகப் பொருத்தமான ஊடகமாக அமைந்தது.

இந்திய தேசிய அபிவிருத்தியின் மீது பொதுமக்களை வழிப்படுத்திக்கொள்ளும் பணிக்கு சினிமா பங்களிப்பாற்றியது. 1949 இல் நேரு அரசாங்கத்தினால்

திரைப்படத் திறனாய்வுக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. இக்காலகட்டத்தில் உருவான திரைப்படங்கள் புதிய இந்திய தேசியத்துவ அபிலாசைகளுடன்கூடியதாக சோசலிச, காலனித்துவ எதிர்ப்புச் செய்திகளைப் பரப்புரை செய்யலாயிற்று. நேருவின் சோசலிசம் இத்திரைப்படங்களில் இழையோடியது. இருந்தது. இத்திரைப்படங்கள் இந்திய திரையரங்குகளைக் கவர்ந்ததைப் போலவே திரைப்படங்களின் அடிநாதம் இந்தியர்களின் குருதியை நோக்கிப் பாயலாயிற்று.

1962 இந்திய-சீனப் போர் இரு நாடுகளுக்குமிடையில் நெருக்கடிகள் பலவற்றைத் தோற்றுவிக்கலாயிற்று. 1950களில் இந்திய-சீன நட்புறவை உறுதிப்படுத்த பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டபோதும் அவை பயனளிக்கவில்லை. ஆவாரா (1951) திரைப்படம் ஓர் இந்தியத் திரைப்படமாக இருந்தபோதும், அது சீன மக்களை வெகுவாகக் கவர்ந்த ஒரு திரைப்படமாகும். சீன மொழியில் **'Liulangzhe''** என்ற பெயரில் இத்திரைப்படம் பிரபல்யமடைந்தது. இந்திய-சீன நெருக்கடிக்கு மத்தியில் இரு திறத்தவர்களுக்கும் பொதுவான ஒரு நயப்பை சினிமா கொண்டு வந்தது.

தேசிய உணர்வை மேலிடச்செய்யும் நோக்கில் உருவாக்கப்பட்டு மக்களின் கவனயீர்ப்பை உயர்ந்தபட்சம் வென்றெடுத்த ஒரு திரைப்படமே, 'மதர் இந்தியா' (1957). இத்திரைப்படத்தில் முக்கிய பாத்திரமேற்று நடித்த 'ராதா' ஒரு பிடி மண்ணை தன் கையிலேந்தி தனது நெற்றியின்மீது ஒற்றிக்கொள்ளும் அதேநேரம் பின்னணியில் வந்தே மாதரம்...' என்ற சம்பிரதாயப் பாடலிசை ஒலிப்பதன் மூலம் முதற்காட்சியே தேசியத்துவத்தை பறைசாற்றுவதாக இருந்தது.

சுதந்திரத்தையடுத்து மலர்ந்த புதிய இந்தியாவை நோக்கிய வாலிபத்தைத் தயார்படுத்துவதற்கு ராஜ் கஃபூரின் சினிமா மிகவும் தூண்டுதளித்தது. 'ஸ்ரீ 420' திரைப்படத்தில் வரும் பாடல்களிடையே இத்தேசியவாத கருத்துரு சூழ்கொண்டுள்ளது. இந்தியப் பாடல்களிடையே 'தில்ஹே ஹிந்துஸ்தானி' ('இருதயம் இந்துஸ்தான்') என்ற பாடல் ஒலிக்கத் தொடங்கியது. ஒரே இனமாக வீறுகொண்டு எழுவதற்குத் தேவையான பலத்தை அது மனதில் ஊன்றியது. சாதி, குலம், கோத்திரம், இனம், மதம் எதுவாக இருப்பினும் அவை அனைத்தையும் விட நாடு முக்கியமானதாக இருந்தது. அதேபோல் தேசியவாத கண்ணோட்டத்திலிருந்து உருவான திரைப்படங்களுக்கு உதாரணமாக அண்மைக் காலத்தில் அமீர்கானின் நடிப்பில் வெளியான பல திரைப்படங்களைச் சுட்டிக் காட்டலாம். சர்ஃபரொஷ் (1999), லகான் (2001), மங்கள பாண்டே (2005), ஃபானா (2006) போன்றன இவற்றில் சில அண்மைக்கால வரலாற்றில் நரேந்திர மோடி அதிகாரத்தைப் பிடிப்பதற்கும் ஆட்சியமைப்பதற்கும் மக்கள் அபிப்பிராயத்தை வடிவமைப்பதற்கும் பின்புலத்தை அமைத்துக்கொடுத்த பல திரைப்படங்கள் உள்ளன. அத்தகைய திரைப்படங்களின் கதாம்சம், சூழமைவு மோடி அரசாங்கத்தின் கொள்கைகளுடனும் நோக்குடனும் சமாந்தரமாகவே பயணித்தன. தேர்தல் இயக்கத்திற்குத் தேவையான பின்புல ஆதரவையும் உரத்தையும் திரைப்படங்கள் ஊட்டின. அது உத்வேகமானது மாத்திரமன்றி, எளிமையானதாகவும் இருந்தது.

The Family Man திரைக்கதை பற்றி சுருங்கக் கூற முற்படுவதாயின் அது இவ்வாறானது. இந்தியாவின் முன்னாள் (பெண்) பிரதமரை படுகொலைசெய்வதற்கு முன்னெடுக்கப்படும் ஒரு நடவடிக்கையை இந்திய புலனாய்வுத்துறை முறியடிக்கிறது. இப்படுகொலைத்திட்டம் புலிப் பயங்கரவாதிகளினால் முன்னெடுக்கப்படுகிறது. இக்கதைக்குள் இந்திய அரச ஊழியரொருவரின் வீட்டு நிலைமையும் பேசுபொருளாகிறது. அதேபோல் நகர்ப்புறச் சூழலொன்றில் குடும்ப உறவு, பிள்ளைகளை விட்டுத் தூரமாகும் பெற்றோரின் உறவு, இந்தியாவில் காணப்பட்ட குடும்ப கலாசார மாற்றம், பிள்ளைகளின் இயல்புகள், அதனைச் சுற்றி கட்டியெழுப்பப்படும் சூழமைவை இத்திரைப்படம் சித்தரிக்கின்றது. திரைப்பட ரசிகர்களுக்கு திகிலுணர்வையும் நகைச்சுவையுணர்வையும் அள்ளி வழங்குகின்றது. இத் திரைப்படத்துடன் திரையரங்கை ஒன்றியிருக்கச்செய்வதில் அது வெற்றி பெறுகிறது. அடுத்த காட்சியைக் காண வேண்டுமென்ற ஆர்வத்தை மேலிடச்செய்யும்படியாக இத்திரைப்படத்தின் ஒவ்வொரு காட்சியும் கோர்க்கப்பட்டுள்ளது.

இந்திய (பெண்) பிரதமரையும் இலங்கை மற்றும் சீன அரசாங்கங்களுக்கு இடையிலான உறவையும் அதன் மூலம் இந்தியாவுக்கு ஏற்படும் நெருக்குவாரங்களையும் இத்திரைப்படத்தின் ஆரம்பக் காட்சிகள் நம் மனக்கண் முன் கொண்டு வருகின்றன. சீன அரசாங்கம் இலங்கையில் மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி அது நேரடியாகப் பேசுகிறது. அதேபோல் சீனாவுக்கு நெருக்கமான இலங்கையை மீண்டும் இந்தியாவுக்கு நெருக்கமானதாக்கிக்கொள்ள இந்திய அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் பிரயத்தனங்களை இத்திரைப்படம் நம் மனக்கண் முன் கொண்டு வருகிறது. அதற்கான இந்தியாவின் விருப்பையும் தேவையையும் பற்றி இத்திரைப்படம் உணர்த்துகிறது. இத்திரைப்படத்தில் வரும் காட்சிகளில் இலங்கை அரசுத் தலைவர்கள் புனைப் பெயர்களில் வலம் வருகின்றனர். சீமா பிஷ்வாஸ், இத்திரைப்படத்தில் இந்தியப் பிரதமரின் பாத்திரமேற்றுள்ளார். இலங்கை அரசுத் தலைவர் பாத்திரத்தில் லசித் ரூபதுங்க எனும் புனைப்பெயரால் அறியப்படுகின்றவர் வலம் வருகின்றார். ஓர் அரசுத் தலைவரின் கம்பீரமான தோற்றம் அவரது ஆடை அணிகலன்கள் பிரதிபலிக்கிறது. இத்திரைப்படத்தின் 'கிளைமெக்ஸ்' எல்ரீரீஈ இயக்கம் தொடர்பான சம்பவத் தொடராகும். எல்ரீரீஈ இயக்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தலைதூக்கி நாசகார வேலைகளில் ஈடுபடலாமென்ற செய்தியை இத்திரைப்படம் உணர்த்துகிறது. அதேபோல் அதனை நிறுத்தும் ஆற்றலும் பலமும் இந்தியாவிற்குள்ளது என்ற செய்தியை இத்திரைப்படம் உணர்த்துகிறது. அவ்வாறு செய்யாத பட்சத்தில் அவர்கள் மீண்டும் தலைதூக்குவார்கள் என்ற செய்தியை திரைப்படத்தின் ஊடாக எடுத்தியம்புகின்றனரா என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும். ஒரு வகையில் இது ஓர் அச்சுறுத்தல் விடுப்பா என்ற கோணத்திலும் சிந்திக்கலாம். இது என் சொந்த அபிப்பிராயம்..

இந்த இந்தியத் திரைப்படம் யுத்தம் முடிவடைந்து ஒரு தசாப்தத்திற்கும் கூடுதலான காலம் கடந்துள்ள நிலையில் எல்ரீரீஈ இயக்கம் பற்றி மீண்டும் ஞாகமூட்டுவதைப் போன்றுள்ளது, யுத்தமும் அதைச் சார்ந்தவையும் இந்த சினிமாவுக்கு வெற்றிகரமான கதைப்பொருள்களைக் கொண்டு சேர்ப்பிக்கின்றது. முதலாம், இரண்டாம் உலக மகா யுத்தங்கள் பற்றிய திரைப்படங்கள் இன்றும் வெளிவருவது அதற்கு உதாரணமாகும். இருப்பினும் இத்திரைப்படத்தின் மூலம் சித்தரிக்கப்படுவது இன்றைய நிலைமையே. புலிகள் இயக்கம் வெளிநாடுகளில் ஒழுங்கமையும் விதத்தையும் கைநழுவிப் போன பன்னாட்டுத் தொடர்புகளை அவர்கள் கட்டியெழுப்பிக்கொள்ளும் விதத்தையும் அது சித்தரிக்கின்றது. முன்பு காணப்பட்ட ஆயுதப் போராட்ட முறைக்குப் பதிலாக ஓர் அரசியல் தோற்றப்பாட்டை உருவாக்கிக்கொள்வது புதிய வடிவமாக உள்ளதென்பதும் இத்திரைப்படத்தினூடாக எடுத்துக் காட்டப்படுகிறது. இயக்கத்தில் தலைமைத்துவ மாற்றம் இடம்பெறுவது அந்நோக்கம் கருதியே. ஆக்கிரமிப்புப் போர் மனோபாவம்கொண்ட குழுவினர் படிப்படியாக இயக்கத்தை விட்டு தூரமாகும் விதத்தையும் அரசியல் ரீதியான போராட்டமொன்றுக்குத்

தயாராகும் விதத்தையும் அதற்கு அமைப்பினுள் கிடைக்கும் வரவேற்பையும் வாய்ப்புகளையும் மிகவும் தத்ரூபமாக இத்திரைப்படம் சித்தரிக்கின்றது. அவர்கள் தமது இலக்கை நோக்கி இன்னும் நுட்பமாக இயங்குகின்றனர் என்ற செய்தியை இதில் வரும் காட்சிகள் கருத்தூன்றச் செய்ய முற்படுகின்றன.

யுத்தமொன்று மூளுவதற்கு பெரும்பாலும் மூன்றாம் தரப்பு நடவடிக்கை எடுக்கும் சந்தர்ப்பங்களுண்டு. இத்திரைப்படத்தில் 'சுப்பு' எனும் நபர் கொலைசெய்யப்படும் சந்தர்ப்பம் அதற்கோர் எடுத்துக்காட்டு. சுப்புவின் கொலை மீண்டுமொரு ஆயுதப் போராட்டம் வெடிப்பதற்கான பாதையைத் திறந்து விடுகிறது. இருப்பினும், அவர்களின் தேவைக்கான மோதலொன்றை உருவாக்கும் நோக்கில் அது மூன்றாம் தரப்பொன்றினால் ஏற்படுத்தப்படுகிறது. யுத்தமொன்றின் மூலம் இலாபமடையும் ஒரு மூன்றாம் தரப்பே பெரும்பாலும் யுத்த மோதல்களை மூட்டி விடுகிறது. இவ்வாறு மோதல்களை மூட்டிவிட்ட அவர்களின் நோக்கங்களை அதனூடாக அடைந்துகொள்ளும். இத்திரைப்படத்தில் இந்தியாவுக்கு ஊறுவிளைவிக்கும் நோக்குடன் முஸ்லிம் தீவிரவாத இயக்கங்கள் இம்மோதலை மூட்டி விடுகின்றன. புலிப் பயங்கரவாதிகளும் அக்கூட்டணியில் இணைகின்றனர்.

இந்தியப் (பெண்) பிரதமரை படுகொலைசெய்வதற்கு எல்ரீரீஈ இயக்கம் தீட்டும் திட்டத்துடன் திரைப்படத்தின் முக்கிய கவனயீர்ப்பு குவிமையப்படுத்தப்படுகின்றது. அதன் மூலம் உலகெங்கும் பரந்து வாழும் எல்ரீரீஈ இயக்க செயற்பாட்டாளர்களுக்கு எவ்வாறான ஒரு செய்தி விடுக்கப்படுகின்றதென்பது பற்றி சிந்திக்க வேண்டும். புலிகள் இயக்க உறுப்பினரான ராஜி, இத்திரைப்படத்தில் வலம் வரும் ஒரு கதாநாயகி. யுத்தத்தின் இறுதியில் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு தப்பியோடி தொழில்செய்துகொண்டு வெளிச்சத்துக்கு வராமல் பிழைப்பு நடாத்துகிறாள் ராஜி. அவ்வாறான ஏராளமானவர்கள் உண்மையிலேயே இந்தியாவில் வாழ்வதாக இருக்கலாம். ஒரு சம்பவம் காரணமாக ஒரு முறை அவள் தற்கொலை முயற்சியில் இறங்குகிறாள். அப்போது அவளுக்கு தொலைபேசி அழைப்பொன்று கிடைக்கிறது. தனது இயக்கத்தின் தலைவரிடமிருந்து ஒரு செய்தி கிடைக்கிறது. புதியதொரு நடவடிக்கைக்கான கட்டளை அவளுக்குக் கிடைக்கிறது. இக்காட்சியின் மூலம் வெளியிடப்படும் ஏதேனுமொரு செய்தி உள்ளதா? செயலிழந்துள்ள எல்ரீரீஈ இயக்க உறுப்பினர்களுக்கு தமது நோக்கத்தை முன்வைத்து துணிந்து செயற்படுவதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தலைவரிடமிருந்து தொலைபேசி அழைப்பொன்று வரக் கூடும். இயக்கத்தின் மனோநிலையை ஒரு யுத்தம் அல்லது மோதலுக்காக ஒரே பாதையில் வைத்துக்கொள்ள இத்திரைப்படம் முயற்சி எடுத்துக்கொள்கிறதா என்ற கேள்வி எனக்குள் எழுந்தது. இயல்பாகவே வாழ்வைத் தொலைக்கும் வரை அவர்களின் நோக்கத்திற்காக மௌனித்திருக்க வேண்டும் என்ற செய்தியைக் கொண்டுவருவதற்கு அவ்வாறான பல காட்சிகள் திரைப்படத்தில் காண்பிக்கப்படுகின்றன. இயக்கம், சர்வதேசளவில் மிகச் சிறந்த முறையில் ஒழுங்கமைத்து வருகின்றது என்ற செய்தியை எடுத்தியம்ப இத்திரைப்படம் முயற்சிக்கிறது. செயலிழந்துள்ள புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு திரைப்படம் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்துகின்றதென்பது என் கருத்து. அதேபோல் புதியதொரு தூண்டல் ஏற்படுவதற்கும் அது காரணமாக அமையலாம்.

ஏதேனுமொரு திரைப்படத்தின் மூலம் செய்தியொன்றைத் தாங்கிவரும்போது அதற்கு சரிநிகரான சம்பவங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. அத்தகைய சம்பவங்கள் மக்கள் மனதில் ஏற்படுத்தும் தாக்கமே அதற்குரிய காரணமாகும். உதாரணமாக, தற்காலைகள் பற்றிய செய்திகள் வெளியாகின்றபோது சமூகத்தில் அவ்வாறே தற்கொலைகள் இடம்பெறும் போக்கு பற்றி அறியக் கிடைக்கும். அத்தகைய சம்பவங்கள் மக்கள் மனதில் ஏற்படுத்தும் தாக்கம் அதற்குரிய காரணமாகும். அவ்வாறானவை குறித்து மேற்கொள்ளப்பட்ட சமூகவியல் ஆய்வுகளும் உள்ளன. சினிமாவும் அவ்வாறானதே. பெரும்பாலான தென்னிந்திய தமிழ், மலையாள திரைப்படங்களைப் பார்த்துவிட்டு அத்திரைப்படங்களில் காட்சிப்படுத்தப்படுவதைப் போல் வன்முறைகளில் ஈடுபடுவோர் சமூகத்தில் தோன்ற வாய்ப்புள்ளது. சினிமாவினூடாக நடத்தைசார்ந்த மாற்றங்கள் வேகமாக இடம்பெறுவதுடன், அதனை சமூகத்திலிருந்தும் அவதானிக்க முடிகிறது.

இணையத்தள கதைத்தொடர்களின்படி சிறிய குழுவொன்றாக இணையும் ராஜி உள்ளிட்டவர்கள் ஒரு முறை இலங்கைக்கும் படகு மூலம் செல்கின்றனர். அப்புலம்பெயர்வின் ஒழுங்குபடுத்தப்பட்ட தன்மையை திரைப்படம் மிகவும் தத்ரூபமாக எடுத்துக் காட்டுகிறது. இலங்கையில் குறிப்பிட்ட ஓரிடத்தில் இரகசியமான முறையில் பூமிக்குள் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் வெடிபொருள்களை எடுப்பதற்கே அவர்கள் இலங்கை வருகின்றனர். ஆயுதங்கள் பூமிக்குள் புதைத்துவைக்கப்பட்டுள்ள இடங்கள் பற்றிய தகவல்கள் தொழில்நுட்ப ரீதியாக சேமிக்கப்பட்டுள்ளது. அவற்றை குறிப்பாக இனங்காணும் திறமை அவர்களுக்குள்ளது. போராட்டமொன்றுக்கு அணிதிரளும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பயன்படுத்துவதற்கான ஆயுதங்கள் முறையாக பூமிக்குள் புதைக்கப்பட்டிருக்கும் என்பதா இதன் மூலம் காண்பிக்கப்படுகிறது? அதாவது ஆயுதப் போராட்டமொன்றுக்கு தேவைப்படும் வெடி பலம் திட்டமிட்டபடியும் முறையாகவும் சேமிக்கப்பட்டுள்ளதென்பதற்கான ஒரு சமிக்ஞையா? மீண்டும் போரிடும் எதிர்பார்ப்பை ரசிகர்கள் மனத்தில் விதைப்பதற்கு இக்காட்சிகள் மிகவும் தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ளன. அதற்காக உரையாடல், இசை, படப்பிடிப்பு, நடிப்பு என்பன மிகவும் திட்ப நுட்பமான முறையில் கையாளப்பட்டுள்ளது. மீண்டுமொரு யுத்தத்திற்கு அல்லது நாசகார வேலைகளுக்காக அணிதிரளும்போது ஏற்படக்கூடிய ஒரு பிரச்சினை, ஆயுதங்களை வழங்குவதே. அதுபோன்ற ஒன்றுக்கு இயக்கப்பாடற்ற சமூகம் மனதை குழப்பிக்கொள்ள வேண்டிய தேவையில்லை என்ற செய்தியையும் அதற்குத் தேவையான பின்புலம் அமைக்கப்பட்டுள்ளது என்ற செய்தியையும் இக்காட்சிகள் புலப்படுத்துகின்றனவா என்றும் சிந்திக்கலாம்.

யுத்தமொன்றைத் தொடர்ந்து ஏற்படக்கூடிய சமூக நிலைமையை அரசாங்கம் சிறப்பாக முகாமை செய்ய வேண்டும். அது ஒரு யுத்தத்தைப் போன்று சிரமமான ஒரு கருமமே. சமூகத்தில் யுத்தப் பயிற்சி பெற்ற ஒரு நோக்கிற்காகவும், இலக்கிற்காகவும் மனம் வைத்த ஒரு குழு இயக்கப்பாடற்று கிடக்கிறது. பெரும்பாலும் வாழ்வில் அதிக காலம் ஆயுதமொன்றுடன் யுத்த மனோநிலையில் செயற்பட்ட அவர்கள், தற்போது புனர்வாழ்வு பெற்று பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். இக்கதைக்கமைய இந்நோக்கத்துடன் வாழும் மக்களைக் கொண்ட ஒரு கிராமம் திடீரென ஆயுதந்தாங்கி இந்தியப் பொலிஸ் நிலையமொன்றின் மீது தாக்குதல் தொடுக்கின்றனர். செயற்பாடற்றுக் கிடந்தவர்கள் மேற்கொள்ளும் திடீர் தாக்குதலை பொலிஸாரால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. இலங்கையிலும் இவ்வாறான ஒரு சம்பவம் எந்தவொரு நேரத்திலும் ஏற்படலாம் என்ற செய்தியை இத்திரைப்படம் தாங்கி வருகின்றதா என்ற கேள்வி இத்திரைப்படத்தைப் பார்வையிடுவோர் மனதில் எழும். திரைப்படமொன்றினூடாக மக்கட் சமூகமொன்றுக்கு அவ்வாறான ஒரு செய்தி விடுக்கப்படுமா என்றும்கூட சிந்திக்கலாம். சினிமாவிற்குள்ள மக்கள் அபிப்பிராயத்தை வடிவமைக்கும் பண்பு இவ்வாறானதொரு நிலையில் தாக்கம் செலுத்தலாம். அன்று போர் வேட்கை மனோபாவத்தையும் தேவைப்படும் வீரியத்தையும் தயார்படுத்திக்கொள்வதற்கு போர்க் காலப் பாடல்கள் உதவியது. அதனை விட கூடுதலான ஒரு பங்களிப்பை திரைப்படங்கள் வழங்குகின்றன.


இத்தொலைக்காட்சித் தொடரின் கதாநாயகன் ஸ்ரீகாந்த் (மனோஜ் பஜ்பாய்) ஓர் உளவுத்துறை உறுப்பினர். கதையின்படி ஸ்ரீகாந்த் உளவுத்துறையிலிருந்து விலகி தகவல் தொழில்நுட்பத் துறையைத் தேர்ந்தெடுக்கிறார். அத்தொழில் தனக்குப் பிடிக்கவில்லையென்பதாலும் இன்னும் பல சூழ்நிலைக் காரணிகளினாலும் அவர் மீண்டும் உளவுத்துறையில் இணைகின்றார். அவ்வாறு அவர் இணைந்துகொள்வது கதைக்கு புது உத்வேகம் அளிக்கிறது. JK எனும் அவரது உதவியாளர் திரைப்படத்திற்குத் தேவையான கலகலப்பை ஊட்டுகின்றார். அதேபோல் 'சர்லொக் ஹோம்ஸ்' துப்பறியும் கதைத்தொடரில் சர்லொக்கின் உதவியாளராக வரும் டொக்டர் வாட்சனின் பாத்திரத்திற்கு நிகரான ஒரு வகிபாகத்தை அந்த உதவியாளர் வகிக்கின்றார்.

மனோஜ் பஜ்பாயின் நடிப்பு இத்திரைப்படத்தில் தனிச் சிறப்பானது. இத்தற்கொலை குண்டுதாரியான ராஜியை பின்தொடர்கின்றார், ஸ்ரீகாந்த். அந்த நடவடிக்கையை முறியடிக்கும் நோக்கில் அவரது மகளும் கடத்தப்படுகின்றார். அதிலிருந்து அவர் மகளை விடுவிக்கின்றார். நடவடிக்கையின்படி வெடிபொருள்கள் நிரப்பிய மென்ரக விமானமொன்றை ரேடாரில் சிக்கிவிடாதவாறு ஓட்டிச் சென்று இந்தியப் பிரதமருக்கும் இலங்கை இராஜதந்திரி ஒருவருக்குமிடையில் சந்திப்பு இடம்பெறும் இடத்தில் வெடிக்க வைப்பதே ராஜியின் இலக்கு. இத்தற்கொலை முயற்சிக்காக அவரது மனம் தேவைக்கு மேல் மாற்றமடைந்துள்ளது. அதன்மீது பாதிப்புச் செலுத்திய காரணிகள் ஒவ்வொன்றாக திரைப்படத்தில் காண்பிக்கப்படுகிறது.

இலங்கை அரச படையினர் மீது சார்த்தப்படும் போர்க்குற்றச்சாட்டுக்கள் பற்றிய விடயமும் திரைப்படத்தில் பேசப்படுகிறது. இவை யாவும் மீண்டும் அணிதிரண்டு போராடும் நோக்கத்திற்காக ஒன்றுகோர்க்கப்பட்ட காட்சிகளாகும். இத்திரைப்படம் தூங்கிக்கொண்டிருக்கும் புலியை தட்டி எழுப்பிவிடுவதற்கு தேவையான பலத்தை அளிப்பதாக இருக்கலாம். எனினும் சினிமாப் படைப்பொன்று என்ற வகையில் அதற்கான சுதந்திரம் இயக்குநருக்குள்ளது. இருப்பினும், திரைப்படத்தைப் பார்க்கும் புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு அல்லது வேறு இயக்கங்களுக்கு அதன் உட்கிடைக் கதை கனதியான செய்திகளைத் தாங்கி வருகிறது. அச்செய்திகளும் ஏற்படுத்தப்படும் உணர்வலைகளும் அழிவுகர நோக்கமொன்றுக்கு இட்டுச்செல்கின்றதாயின், அதிலொரு பிரச்சினையுண்டு. புலிப் பயங்கரவாதிகள் அணிசேரும் பிரச்சினை இலங்கைக்கு மாத்திரமல்ல, இந்தியாவுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். ஈழத்தை வென்ற பின் அவர்கள் இந்தியாவின் பக்கமும் சாய்வார்கள். இந்திய அரசுத் தலைவர் ஒருவரும் புலிப் பயங்கரவாதிகளினால் கொலையுண்டார். அதேபோல் இந்தியாவில் பயங்கரவாதிகள் போசிக்கப்பட்டதுமுண்டு.

இத்திரைப்படம் கணிசமான இரசிகர்களைக் கவர்ந்துள்ளது. IMDB இன் உயர் தரவரிசைப்படுத்தலும் இத்திரைப்படத்திற்குக் கிடைத்துள்ளது. இரசிகர்களைக் கவர்வதற்கு இச்சினிமா படைப்பு குறைவின்றி அனைத்து பங்களிப்புகளையும் வழங்கியுள்ளது. கதைத்தொடரின் உள்ளடக்கம், இலங்கைக்கு எந்தளவு தூரம் குந்தகமானது என்பது குறித்து ஆராயப்பட வேண்டும். சிந்தனா ரீதியான ஒரு போராட்டம், ஒருமோதல் அல்லது ஓர் எழுச்சியின் மீது இத்திரைப்படத்தின் உள்ளடக்கம் எந்தளவு தூரம் தாக்கம் செலுத்துமென்பது குறித்து அலசப்பட வேண்டும். சினிமாவினூடாக வெகு இலகுவில் மக்கள் அபிப்பிராயத்தை ஏற்படுத்த முடியும். தென்னிந்திய தமிழ்ச் சினிமாவில் காணக்கூடிய வெட்டுக்குத்து தாக்குதல் முதலான காட்சிகளும் திரைப்படக் காட்சியமைப்பும் காரணமாக அவற்றைப் பார்வையிடுவோர் அவ்வாறான செயல்களின்பால் எளிதில் ஈடுபாடுகொள்ளும் போக்கை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அடிக்கடி பார்வையிடும் திரைப்படங்களில் வரும் காட்சிகள் எப்பொழுதும் தனிநபரின் மனதிலும் அவரது நடத்தை மீதும் தாக்கம் செலுத்தும். இருப்பினும் இந்த இணையத்தள கதைத்தொடர் ஒவ்வொரு தருணமும் ஆர்வத்தைத் தூண்டி காட்சியமைப்பு இரசிகர்களைக் கவர்ந்தது. திரைப்படத்தின் காட்சியமைப்பும் அவ்வக் கட்டங்களில் ஆவலைத் தூண்டுவதற்காக கையாளப்பட்டுள்ள சினிமா உத்திகளும் பாராட்டுதற்குரியன.. இத்திரைப்படம் பற்றி இந்திய செய்தித்தாள்களிலும் இணையத்தளங்களிலும் பல்வேறு விமர்சனங்கள் வெளியாகின. இணையத்தள கதைத்தொடர் இலங்கை தமிழ் மக்களினதும் முஸ்லிம் மக்களினதும் மனங்களில் வேதனையை ஏற்படுத்தியதென்றே அவற்றில் கணிசமானவை குறிப்பிட்டுள்ளன. அதேபோல் இத்திரைப்படத்தில் தமிழ்மொழியில் பேசும் நடிகர், நடிகைகளின் உச்சரிப்பில் குறைபாடுகள் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர். சிங்களமொழியில் உரையாடும் நடிகர், நடிகைகள் அவற்றை உச்சரிக்கும் பாணி அவர்கள் சிங்களவர்களல்ல என்பதை துல்லியமாக எடுத்துக் காட்டுவதாக உள்ளது. ஒரு தமிழினத்தவரும், ஒரு முஸ்லிம் இனத்தவரும் சிங்களமொழியில் அளவளாவும்போது அவதானிக்கப்படக்கூடிய வித்தியாசங்களுக்குச் சமமான வித்தியாசங்களை அதில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.


எனினும் இத்திரைப்படத்தைப் பார்வையிடும் சிங்களவர்கள் அல்லாத, திரையரங்கிற்கு சிங்கள மொழியிலுள்ள உரையாடல்கள் பிறநாட்டு மொழி உரையாடலாகவே தோன்றுமென்பதால், சிங்களவர்கள் அல்லாதவர்கள் இந்த உரையாடலை நகர்த்திச் செல்கின்றனர் என்பது போன்ற ஒரு பிரமையை ஏற்படுத்தாது. இது இத்திரைப்படத்தை இரசிப்பதற்கு ஓர் இடையூறல்ல. இலங்கையின் பிரதேசங்கள் என்பதை உணர்த்தும் காட்சியமைப்புகள் பலவற்றை இத்திரைப்படத்தில் காணலாம். ஒரு சினிமா படைப்பு என்ற வகையில் இதனை இரசிக்கலாம். கதையின் உள்ளடக்கத்துக்கான பூரண உரிமையும் அதன் இயக்குநருக்குண்டு. சிலவேளைகளில் இது ஒரு நிஜக் கதையாகவும் இருக்கலாம். உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக்கொண்ட, சினிமா பாணியில் மாற்றப்பட்ட ஒரு கதையாகவும் இருக்கலாம். அவ்வாறன்றேல், முற்றிலும் ஒரு கற்பனைக் கதையாகவும் இருக்கலாம். ஒரு சினிமா படைப்பின் மூலம் ஏற்படுத்தப்படும் மக்கள் அபிப்பிராயத்தின் உருவாக்கமும் தாக்கமும் இதனை ஒரு சினிமா படைப்பாக மாத்திரம் எடுத்து நயந்து அசல் நிலைமைகளாக வாழ்வோடு வரித்துக்கொள்ளாதபோது அது தீவிரமடைகிறது. எனினும், ஒரு சினிமாவிலுள்ள உயர் தொடர்பாடல் ஆற்றல்கள் அவ்வாறு இடம்பெறுவதற்கு இடமளிக்காது.



# சமையலறை முதலாளித்துவம்

## விகிதாசாரப்படி பிரித்தொதுக்கும் கணிதப் பிரச்சினை

**கலாநிதி ஜயந்த சேனாதீர**
கணிதப் பிரிவு - ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்



அம்மா வீட்டில் செய்த முந்திரி ஹல்வா ஐம்பது துண்டுகளை பிள்ளைகள் ஐவருக்கு மத்தியில் பகிர்ந்தளிக்க முடிவுசெய்தார். அநேகமான சந்தர்ப்பங்களில் தாய்மார் செய்வதைப் போன்று எல்லாப் பிள்ளைகளுக்கும் அதனை நியாயமான முறையில் பகிர்ந்திட அவருக்கு தேவைப்பட்டது. அவ்வாறு பகிரும் போது ஒருவருக்கு 10 முந்திரி ஹல்வா துண்டுகள் கிடைக்குமென்பது துணிபு.

எனினும் அவர்களுக்கு வேலைசெய்வதன் பெறுமதியும் நன்றாக வேலைசெய்வதன் மூலம் கிடைக்கும் பயன்களும் பற்றி பிள்ளைகளுக்கு இம்முறை கற்றுக்கொடுக்க எண்ணினார். பிள்ளைகள் ஒவ்வொருவரும் வாரத்தில் அவருக்கு உதவிசெய்யும் நேர அளவு விகிதாசாரத்துக்கேற்ப வார இறுதியளவில் 50 முந்திரி ஹல்வா துண்டுகளை பகிர்ந்தளிக்கப் போவதாக கூறினார். அதன்படி தங்களின் சகோதரி வேலைசெய்யும் நேரத்தைப் போன்று இரு மடங்கு நேரம் வேலை செய்து நீங்கள் அம்மாவுக்கு உதவினால் சகோதரி பெறும் முந்திரி ஹல்வா துண்டுகளின் எண்ணிக்கையை விடவும் இரு மடங்கு உங்களுக்குக் கிடைக்கும். (விகிசாசாரப்படி பிரிக்கும் நியாயமான முறை அது) வெறுமனே பிரிக்கும் ஒரு பிரச்சினை விகிதாசார ரீதியாக பகிர்ந்தளிக்கும் ஒரு பிரச்சினையாக மாறியது அவ்வாறே. வார இறுதியளவில் ஒவ்வொரு பிள்ளையும் சமையலறையில் வேலைசெய்த மணித்தியாலங்களின் அளவை அம்மா சமையறையிலுள்ள ஒரு பலகையில் எழுதினார்.

| **பிள்ளையின் பெயர்** | பாலிகா | மாலிகா | ஷாலிகா | நாலிகா | தாலிகா | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| **வேலைகள் செய்த மணித்தியாலங்கள்** | 150 | 78 | 173 | 204 | 295 | 900 |

விதிக்கப்பட்ட விதிப்படி 900 நிமிடங்களில் 150 நிமிடங்கள் வேலைசெய்த பாலிக்காவிற்கு முந்திரி ஹல்வா துண்டுகள் 8 1/3 பங்கு கிடைக்க வேண்டும். எனினும் ஹல்வா துண்டுகளை உடைக்கும் போது அவை சிறு துண்டுகளாக உடைவதால் முழு ஹல்வா துண்டுகளை மாத்திரமே கொடுக்க முடியும். பாலிக்காவுக்கு 08 (உரிய அளவை விட சிறிது குறைவாக) அல்லது 09 துண்டுகள் (உரிய அளவை விட சிறிது அதிகமாக) மற்றைய எல்லாப் பிள்ளைகளுக்கும் இவ்வாறே வழங்கப்படும். மாலிக்காவுக்கு கிடைக்க வேண்டிய சரியான அளவு பங்கு 4 1/3 ஆகும். ஷாலிக்காவுக்கு 9 11/18 ஆகும். நாலிக்காவுக்க 11 1/3 பங்காகும். தாலிக்காவுக்கு 16 7/18 பங்காகும். (இக் கணக்குகள் சரியா என மீண்டும் சரிபார்க்கவும்) இந்த பங்கீடுகள் எதுவும் நடைமுறைக்கு ஏற்றதல்ல என்பதால், அம்மா என்ன செய்ய வேண்டும்?

இப்போது நாங்கள் அம்மா முகங்கொடுத்த சிக்கலின் சாராம்சத்தை எடுத்து சுருக்க வடிவில் முன்வைப்போம்.

சிக்கல் –
விகிதாசார முறையில் பிரித்தொதுக்கும் சிக்கலொன்றில், பிரிப்பதற்கு ஏதாவதொன்று இருக்க வேண்டும். (அம்மாவின் சிக்கலில், அவை முந்திரி ஹல்வா) அதேபோல் பிரிப்பதற்கான விகிதாசார சுட்டியொன்று இருக்க வேண்டும். (அம்மாவின் சிக்கலின் போது அச்சுட்டியானது வாரத்தில் வேலைசெய்யும் நிமிடங்களின் எண்ணிக்கை.)


இப்போது நாம் கலந்துரையாடியது விகிதாசார முறையில் பிரித்தொதுக்கும் ஒரு எண்கணித சிக்கலாகும். நாம் இப்போது, மேலோட்டமாக மற்றுமொரு வித்தியாசமான விகிதாசார பிரித்தொதுக்கும் சிக்கலைப் பார்ப்போம்.

### கெக்கிரிலாந்து பாராளுமன்றம்

சமையலறையில் முந்திரி ஹல்வா பகிரும்போது ஒரு சிலருக்கு கூடுதல் குறைவாதல் அந்தளவு பெரும் பிரச்சினையல்ல. அம்மாவின் நிறைவேற்றதிகாரம் காரணமாக கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பட்டு விடுவார்கள்.

எனினும் கெக்கிரிலாந்து ஜனநாயக நாடாக இருப்பின் குடித்தொகைக்கேற்ப உறுப்பினர் ஆசனங்களைப் பிரித்தெடுக்கும் விதம் பற்றிய முறைமை மிகத் நுல்லியமாக அரசியலமைப்பில் அடங்கியிருக்க வேண்டும். கெக்கிரிலாந்திலுள்ள டிக்கிரி, மிஹிரி, விசிரி, கிக்கிரி, பிப்பிரி ஆகிய மாவட்டங்களின் குடித்தொகையை ஆயிரங்களில் இவ்வாறு முன்வைக்க முடியும்.

| **மாவட்டம்** | டிக்கிரி | மிஹிரி | விசிரி | கிக்கிரி | பிப்பிரி | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| **குடித்தொகை (ஆயிரங்களில்)** | 150 | 78 | 173 | 204 | 295 | 900 |




அம்மாவின் சிக்கல் ஒரு சர்வதேசப் பிரச்சினை என்பது இப்போது உங்களுக்குப் புரிந்திருக்கும். இவ்வாறு இச்சிக்கலை முறைப்படி கற்பதையே நாம் இங்கு செய்ய எதிர்பார்க்கின்றோம். இம்முறைப்படியான கல்விக்கு நாம் ஏரொப்ப அரசு எனும் கற்பனா இராச்சியத்தின் அமைப்பு பற்றி அவதானிப்போம்.

### ஏரொப்ப அரசு

ஏரொப்ப அரசில் 6 தேர்தல் மாவட்டங்கள் உள்ளன. அலபலாவ, பலமுலாவ, கலவெலாவ, தனகலாவ, எழுரெலாவ், ஃபாமர்லாவ என்பவையே

அவை. இத்தேர்தல் மாவட்டங்களை முறையே A, B, C, D, E, F எனும் எழுத்துக்களைக் கொண்டு அழைப்போம். ஏரொப்ப அரசின் குடித்தொகை, 06 தேர்தல் மாவட்டங்களின் அடிப்படையில் பின்வருமாறு பிரிந்துள்ளது: –

| மாவட்டம் | A | B | C | D | E | F | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| குடித்தொகை (ஆயிரங்களில்) | 1646 | 6936 | 154 | 2091 | 685 | 988 | 12500 |

ஏரொப்ப அரசின் A, B, C, D, E, F ஆகிய மாவட்டங்களுக்கு ஏரொப்ப பாராளுமன்றத்திலுள்ள 250 உறுப்பினர் தொகுதிகளைப் பிரித்துக்கொடுக்கும் சட்டத்தை ஏரொப்ப குடியரசு அரசியலமைப்பில் உட்படுத்துவதே தற்போதுள்ள பிரச்சினையாகும். ஒவ்வொரு மாவட்டத்தின் குடித்தொகை விகிதாசாரத்திற்கேற்ப தொகுதிகளைப் பிரிக்க வேண்டுமென்பது அனைவரினதும் ஒருமித்த கருத்தாகும். எனினும் அந்நடவடிக்கைமுறை மிகவும் துல்லியமாக அரசியலமைப்பில் உட்படுத்தப்பட வேண்டும். அதற்கு உதவும் தொழில்நுட்பச் சொற்கள் சிலவற்றின் பொருள் வரையறைகளும் விளக்கங்களும் கீழ்த் தரப்பட்டுள்ளது.

## நியமமான வகுத்தி (standard divisor)

ஒரு தொகுதிக்கான சராசரி குடித்தொகை, 'நியமமான வகுத்தி' என்றழைக்கப்படும். ஏரொப்பாவுக்கு அது 12500,000/250=50,000 ஆகும். (பெரும்பாலும் உள்ளபடியான எண்களில் இது ஒழுங்கற்ற பின்னத்தைத் தரும்.)

## நியமமான பங்கு (standard quota)

மாவட்டமொன்றின் குடித்தொகையை நியமமான வகுத்தியினால் வகுக்கும்போது பெறப்படும் பெறுமானம், 'நியமமான பங்கு' என்றழைக்கப்படும். இதனை நியாயமான பகுதி என்றும் அழைப்பர். இந்நியமமான பங்கு மூலம் மாவட்டத்திற்கு உரித்தாக வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை பெறப்படும். இது பெரும்பாலும் ஒரு முழு எண்ணாக இருக்காமையே இங்கு காணப்படும் பிரச்சினையாகும். உதாரணமாக A மாவட்டத்திற்கு உரித்துடைய நியமமான பங்கு அதாவது ஆசனங்களின் எண்ணிக்கை 1646000/50000=32.92 ஆகும். எனினும் ஆசனங்கள் பாதிகளாகவோ, பின்னங்களாகவோ அல்லது தசம தானங்களாகவோ பெற்றுக்கொடுக்க முடியாது. அவ்வாறாயின், நியமமான பங்கின் கிட்டிய தோராயமான எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கை ஆசனங்களை அம்மாவட்டத்திற்கு வழங்குவது பொருத்தமானதல்லவா? ஆம், நாம் அவ்வாறு நினைப்போம். இப்போது நாம் முதலில் ஏரொப்ப அரசின் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உரித்தாகும் நியமமான பங்கு எவ்வாறானது என்பதைப் பார்ப்போம்.

| மாவட்டம் | A | B | C | D | E | F | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| குடித்தொகை (ஆயிரங்களில்) | 1646 | 6936 | 154 | 2091 | 685 | 988 | 12500 |
| நியமமான பங்கு | 32.92 | 138.72 | 3.08 | 41.82 | 13.70 | 19.76 | 250 |

இப்போது உங்களுக்கு பாடசாலையில் கற்ற கிட்டிய முழு எண்ணிற்கு மட்டந்தட்டல் என்ற பாடம் ஞாபகமுள்ளதா? தசம பகுதி 0.5 க்குக் குறைவானதாயின், அதற்கு கீழுள்ள முழுவெண்ணுக்கு மட்டந்தட்டப்படும். சதம் பகுதி 0.5 க்கு மேற்பட்டதாயின் அல்லது சமமானதாயின், அது கூடிய முழுவெண்ணுக்கு மட்டந்தட்டப்படும். இந்த மட்டந்தட்டலுக்கு கிட்டிய முழுவெண்ணுக்கு மட்டந்தட்டல் என்று கூறப்படும். அவ்வாறு மட்டந் தட்டிய பின் ஏரொப்பாவின் ஒவ்வொரு மாவட்டத்திற்குமுரிய ஆசனங்களின் எண்ணிக்கை எவ்வாறுள்ளதென்று பார்ப்போம்:

| மாவட்டம் | A | B | C | D | E | F | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| குடித்தொகை (ஆயிரங்களில்) | 1646 | 6936 | 154 | 2091 | 685 | 988 | 12500 |
| நியமமான பங்கு | 33 | 139 | 3 | 42 | 14 | 20 | 251 |

என்ன நடந்தது? இப்போது எமக்கு பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கையை மேலும் ஒன்றினால் அதிகரிக்க வேண்டியுள்ளது. ஆனாலும், பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கையை அவ்வாறு நினைத்தபடியெல்லாம் அதிகரிக்க முடியாதென்பதை நீங்கள் நன்கறிவீர்கள். அவ்வாறாயின், நியமமான மட்டந்தட்டல் மூலம் ஏரொப்பா பாராளுமன்றத்தில் பாராளுமன்ற ஆசனங்களை பிரித்தொதுக்கும் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காது.

இப்போது நாம் என்ன செய்யலாம்? மிகச் சிறந்த பங்கீட்டு முறையொன்றை முன்மொழிய வேண்டியுள்ளது. அம்முறையில் மூன்று விடயங்கள் உறுதி செய்யப்பட வேண்டும்.

1. பிரித்தொதுக்கிய பின் ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 250 ஆகவிருத்தல் வேண்டும்.
2. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நியாயமான ஒரு பங்கு, அதாவது குறைந்தபட்சம் தசம பகுதியைக் கைவிடும்போது கிடைக்கும் முழுவெண் ஏனும் உரித்தாக வேண்டும்.
3. அதற்கு தெளிவான கணிமுறையொன்று (அலுகோரிதம்) இருக்க வேண்டும்.

எதிர்வரும் கலந்துரையாடல்களின் போது இவ்வாறு முன்மொழியப்பட்ட முறைகள் ஒவ்வொன்றும் பகுப்பாய்வு செய்யப்படும்.

## ஹெமில்டன் முறை

சரி, இப்படிச் சிந்தித்தால் என்ன? இதற்கு முன்பு பிரித்தொதுக்கும்போது நாம் நியமமான மட்டந்தட்டலின்போது தசம பகுதி 0.5க்கு மேற்பட்ட அல்லது சமமானபோது அதனை கூடிய கிட்டிய முழு எண்ணுக்கு மட்டந்தட்டுவதற்கு நேரிடும் ஒரு பிரச்சினையை எதிர்நோக்கினோம். நாம் இப்படிச் செய்து பார்ப்போமா? பின்னம் எப்படியிருப்பினும், அதனை மறந்துவிட்டு கீழுள்ள முழு எண்ணிக்கையை மாவட்டத்திற்கு பெற்றுக்கொடுப்போம். எந்தவொரு மாவட்டத்திற்கும் நியமமான பங்கிற்குக் கீழுள்ள கிட்டிய முழு எண்ணுக்கு மட்டந் தட்டுவோம். எந்தவொரு மாவட்டத்திற்கும் நியமமான பங்கிற்கு கீழுள்ள கிட்டிய முழு எண்ணிக்கை உறுதியாக்கப்படுவதால், அது நியாயமான ஒரு முறையாகும். எனினும் இப்போது எழும் பிரச்சினை எது? ஆம், நீங்கள் உணர்வது போன்று இவ்வாறு செய்யும் போது பங்கிடும் ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 250 ஐ விடக் குறைய வாய்ப்புண்டு. அது சரி, அவ்வாசனங்களின் எண்ணிக்கை பூர்த்தியடையும் வகையில் மீதமுள்ள எண்ணிக்கை ஆசனங்களை முறையே கூடிய பின்னத்தைக்

கொண்ட மாவட்டங்களுக்கு வழங்குவது அநீதியானதா? உண்மையில், அதில் நியாயமிருப்பதாகத் தெரியவில்லை. அமெரிக்கரான அலெக்சாண்டர் ஹெமில்டனினாலும் முன்மொழியப்பட்டதும் இம்முறையே. அதை எமக்கு ஓர் அல்கோரிதமாக இவ்வாறு முன்வைக்கலாம்.

**படிநிலை 1** ஒவ்வொரு மாவட்டத்தின் நியமமான பங்கைக் கணக்கிடுங்கள்.

**படிநிலை 2** ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நியமமான பங்கின் கீழுள்ள முழு எண்ணைப் பெற்றுக் கொடுங்கள்.

**படிநிலை 1** படிநிலை 2 இல் ஆசனங்களின் எண்ணிக்கை பூர்த்தி அடையவில்லையெனில், ஆசனங்களின் எண்ணிக்கை பூர்த்தி அடையும் வரை முறையே ஆகக்கூடிய எஞ்சிய பின்னத்தைக் கொண்டுள்ள மாவட்டங்களுக்கு ஓர் ஆசனம் வீதம் பெற்றுக் கொடுங்கள்.

இம்முறையே ஐக்கிய அமெரிக்காவில் 1850 முதல் 1900 வரை பயன்படுத்தப்பட்டது. தற்போது இம்முறையே இலங்கையில் பயன்படுத்தப்படுகிறது.

நாம் இப்போது ஹெமில்டன் முறைப்படி ஏரொப்ப அரசின் மாவட்டங்களுக்கிடையில் 250 ஆசனங்களைப் பகிர்ந்தளிப்போம்.

| மாவட்டம் | A | B | C | D | E | F | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| நியமமான பங்கு | 32.92 | 138.72 | 154 | 2091 | 685 | 988 | 12500 |
| கீழ்மட்ட முழு எண் | 32 | 138 | 3 | 41 | 13 | 19 | 248 |
| எஞ்சிய பங்கு | 0.92 | 0.72 | 0.08 | 0.82 | 07 | 0.76 | 4.00 |
| எஞ்சிய பங்கின் முறையே | முதலாம் | நான்காம் | | இரண்டாம் | | மூன்றாம் | |
| (ஆசன உரித்து) | 33 | 139 | 3 | 42 | 13 | 20 | 250 |

இப்போது அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் கலைந்து செல்ல முடியுமா? அனைவருக்கும் நியாயம் கிட்டுமா? ஐக்கிய அமெரிக்கா 1900 ஆம் ஆண்டில் இம்முறையைக் கைவிட்டது ஏன்? இதை விட நியாயமான முறைகள் இல்லையா? இவை அனைத்துக்கும் உரிய விடையை எதிர்வரும் இதழில் எதிர்பாருங்கள்.

உசாத்துணை நூல்கள்:


- Excursions of Modern Mathematics, Peter Tannenbaum, 2009


பக்கம் 04...

2022.06.01 ஆம் திகதியிலிருந்து 2022.06.28 ஆம் திகதி வரை கிராம அலுவலர் அலுவலகங்களிலும், மாவட்ட தேல்தல்கள் அலுவலகங்களிலும் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகப்பூர்வ இணையத்தளத்திலும் காட்சிப்படுத்தப்படுத்தப்படும். (இக்காலக்கெடு, கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களினால் மாற்றமடைவதற்கும் இடமுண்டு)

## உரிமைக்கோரிக்கைகளையும் ஆட்சேபனைகளையும் முன்வைத்தல்

2022 ஆம் ஆண்டுக்கான தேருநர் இடாப்பில் பதிவுசெய்துகொள்வதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள எனினும் அதற்குப் பரிந்துரைக்கப்படாதவர்களுக்கு உரிமைகோரலுக்கு மேற்குறித்த 2022.06.01 ஆம் திகதியிலிருந்து 2022.06.28 ஆம் திகதி வரையான காலக்கெடுவுக்குள் மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களுக்கு உரிமைக்கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும்.

அதேபோல் தகைமை இல்லாத ஒருவரின் பெயர் விதந்துரைக்கப்பட்டிருப்பின், அதற்கும் ஆட்சேபனையொன்றை உரிய படிவத்தில் இரு பிரதிகளைக் கொண்டதாக மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களில் இக்காலப்பகுதிக்குள் முன்வைக்க முடியும்.

அதற்கமைய இவ்வனைத்து நியதிச்சட்ட பணிகளின் முடிவில் 2022 ஆம் ஆண்டிற்கான தேருநர் இடாப்பை 2022 ஆண்டு முடிவடைவதற்குள் அத்தாட்சிப்படுத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு உரிய ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

## 18 வயதை எய்தியவுடன் வாக்குரிமையை வழங்குதல்

18 வயதை எய்தியவுடன் குறைநிரப்பு தேருநர் இடாப்புக்கள் மூலம் வாக்குரிமையை வழங்குவதற்கான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய பெப்ரவரி 01 முதல் மே 31 வரை, ஜூன் 01 முதல் செப்டம்பர் 30 வரை, அக்டோபர் 01 முதல் ஜனவரி 31 வரையான காலப்பகுதிகளில் 18 வயதை எய்துவோரின் பெயர்களை உட்சேர்ப்பதற்கு குறைநிரப்பு தேருநர் இடாப்புக்கள் ஒவ்வொரு 04 மாதங்களுக்கும் ஒருமுறை இனிமேல் தயாரிக்கப்படும்.

அதன் அடிப்படையில் 2022.02.01 ஆம் திகதியிலிருந்து 2024.01.31 ஆம் திகதி வரை (இரண்டு ஆண்டு காலமாக) 18 வயதை எய்தும் இளம் பிரஜைகளை குறைநிரப்பு தேருநர் இடாப்பில் உட்சேர்ப்பதற்கு தகவல் திரட்டப்படுகிறது. 2004.02.01 ஆம் திகதியிலிருந்து 2006.01.31 ஆம் திகதி வரையான காலத்தில் பிறந்த ஒருவராயின், (16–18 வயது வரையானவர்களின் விபரங்கள் YC/2022 படிவத்தில் உட்படுத்தப்பட்டு தேசிய அடையாள அட்டையில் அல்லது ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டைத் தகவல்களை உறுதிப்படுத்துவதற்கான கடிதத்தின்) பிரதியொன்றை அல்லது பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்றை கிராம அலுவலருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கவும். அது சம்பந்தமான மேலதிக விபரங்கள் YC/2022 படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படிவத்தை உரிய கிராம அலுவலரிடமிருந்தும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும். இது தவிர தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்தும் (www.elections.gov.lk) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.



2022 புத்தாண்டில் அலுவலக கடமைகளை ஆரம்பித்துவைத்த சந்தர்ப்பம்.



இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் 2022.01.24 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழு அதிகாரிகளை சந்தித்தபோது



கிராம அலுவலர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் 2022.01.25 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடல்.



அரசியல் கட்சிச் செயலாளர்களுடன் 2022.02.23 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடல



இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர் 2022.03.08 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகளைச் சந்தித்த வேளை



தேர்தல் ஆணைக்குழுவினால் அமுல்படுத்தப்படும் பல்வேறு பயிற்சித்திட்டங்களுக்காக அத்தியாவசியமாக இருந்த நடமாடும் பயிற்சி அலகொன்று (IFES (International Foundation for Electoral Systems) நிறுவனத்தினால் தேர்தல் ஆணைக்குழுவிற்கு 2022.03.08 ஆம் திகதி வழங்கப்பட்டது.


**மதியுரைச் சபை**

சட்டத்தரணி நிமல் ஜீ.புஞ்சிஹேவா - தவிசாளர்
எஸ்.பீ.திவாரத்ன - உறுப்பினர்
கே.பீ.பீ.பத்திரண - உறுப்பினர்
எம்.எம்.மொஹமட் - உறுப்பினர்
பீ.எஸ்.எம்.சாள்ஸ் - உறுப்பினர்
சமன் ஸ்ரீ ரத்நாயக்க - தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்
எச்.எம்.ரி.டி.ஹேரத் - செயலாளர்
ரசிக்க பீரிஸ் - மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (தேசிய தேர்தல்கள்)

**பதிப்பாசிரியர்** - சன்ன பீ. த சில்வா (பணிப்பாளர் - ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல்)
**கணினி பக்க வடிவமைப்பு** - அமில கமகே
**அச்சுப் பதிப்பு** - அரசாங்க அச்சகம்
**வெளியீடு** - ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல் பிரிவு, தேர்தல் ஆணைக்குழு



**உங்கள் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எமக்கு எழுதி அனுப்புங்கள்:**

பதிப்பாசிரியர் - "புள்ளடியின் பலம்"
தேர்தல் ஆணைக்குழு
தேர்தல்கள் செயலகம்
02, சரண மாவத்தை
இராஜகிரிய,
இலங்கை

(+94)112868441-42-43
(+94)112868426
info@elections.gov.lk
www.elections.gov.lk
SriLankaElectionCommission
elecomsl
Election Commission of Sri Lanka
Election Commission of Sri Lanka



ISSN-2706-0055





இச்சஞ்சிகையிலுள்ள ஆக்கங்களில் அடங்கியிருக்கும் விடயங்களுக்கான பொறுப்பு, அவ்வாக்கங்களை எழுதியவர்களைச் சாரும் என்பதோடு அவற்றில் அடங்கியிருக்கும் விடயங்கள் தேர்தல் ஆணைக்குழுவின் கருத்து வெளிப்பாடன்று.